செப்பு காசு, சங்கு வளையல், பானை ஓடுகள், தந்தத்திலான பொருட்கள், சுடுமண் காதணி

இதுவரை 14,535 தொல்பொருட்கள் கண்டெடுப்பு

கீழடி அருகே ரூ.12.21 கோடியில் உலகத்தர அகழ் வைப்பகம்: எடப்பாடி பழனிசாமி அடிக்கல்

சென்னை, ஜூலை 20–

முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி இன்று தலைமைச் செயலகத்தில், தொல்லியல் துறை சார்பில் சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், கீழடி அருகில் கொந்தகை கிராமத்தில், கீழடியில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களை காட்சிப்படுத்திட 12 கோடியே 21 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள உலகத்தரம் வாய்ந்த அகழ்வைப்பகத்திற்கு காணொலிக் காட்சி மூலமாக அடிக்கல் நாட்டினார்.

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், மதுரையிலிருந்து இராமேசுவரம் செல்லும் சாலையில் மதுரைக்கு கிழக்கே 13 கி.மீ. தொலைவில் வைகை ஆற்றின் தென்கரையில் கீழடி கிராமம் அமைந்துள்ளது. இவ்வூரில் உள்ள பள்ளிச்சந்தை திடலில் 110 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள தொல்லியல் மேட்டில் இந்திய தொல்லியல் துறை 2014 –2015, 2015–2016, 2016–2017 ஆகிய மூன்று ஆண்டுகள் அகழாய்வு மேற்கொண்டது.

6720 அரிய பொருட்கள்

இச்சான்றுகளின் அடிப்படையில் தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை, கீழடியில் அகழாய்வினை மேற்கொள்ள மத்தியத் தொல்லியல் ஆலோசனைக் குழுவின் அனுமதியினைப் பெற்றது. 2017 –2018 ஆம் ஆண்டு நான்காம் கட்ட அகழாய்விற்கு தமிழ்நாடு அரசால் 55 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அகழாய்வு நெறிமுறைகளின்படி, 2017 –2018ஆம் ஆண்டில் நான்காம் கட்ட தொல்லியல் அகழாய்வு தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறையால் மேற்கொள்ளப்பட்டது. இந்த அகழாய்வில் 5,820 அரிய தொல்பொருட்களும், சங்ககாலம் சார்ந்த செங்கல் கட்டுமானப் பகுதிகளும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

ஐந்தாம் கட்ட அகழாய்வு பணிகளுக்காக தமிழ்நாடு அரசால் 2018–2019ஆம் ஆண்டு 47 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்த அகழாய்வில் பல்வேறு வடிவிலான செங்கல் கட்டுமானங்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளன. மேலும், சுமார் 900 தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

ஆறாம் கட்ட அகழாய்வு பணிகளுக்காக 2019–2020ஆம் ஆண்டில், மத்தியத் தொல்லியல் ஆலோசனைக் குழுவின் அனுமதியை பெற்று, கீழடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள மணலூர், கொந்தகை மற்றும் அகரம் ஆகிய இடங்களில் தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறையால் ஆறாம் கட்ட தொல்லியல் அகழாய்வுப் பணிகள் முதலமைச்சரால் 19.2.2020 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

செப்பு காசு, சுடுமண் சாதனம்

அண்மைக்கால அகழாய்வுகளும், அறிவியல் முறையான காலக்கணிப்புகளும் தமிழ்நாட்டில் ஏறத்தாழ 15 லட்சம் ஆண்டுகளாக மக்கள் வாழ்ந்து வருகின்றனர் என்பதனை மெய்ப்பிக்கின்றன. தற்போது கீழடி ஆய்வுகள் கி.மு.6ஆம் நூற்றாண்டளவில் தமிழகத்தில் மக்கள் எழுத்தறிவு பெற்றிருந்தனர் என்று தெரிவிக்கிறது. மேலும், இந்தியாவில் கங்கைச் சமவெளி பகுதியில் கி.மு. 6ஆம் நூற்றாண்டளவில் தோன்றிய இரண்டாம் நகரமயமாக்கம் தமிழகத்தில் காணப்படவில்லை என்ற கருதுகோள் இதுவரை அறிஞர்களிடையே நிலவிவந்தது. ஆனால் கீழடி அகழாய்வு கி.மு. 6ஆம் நூற்றாண்டளவில் தமிழகத்தில் நகரமயமாக்கம் உருவாகிவிட்டதை நமக்கு உணர்த்துகிறது.

14,535 தொல்பொருள்

மேற்கண்ட நிகழ்வுகளின் அடிப்படையில், 2013–2014ஆம் ஆண்டு முதல் ஆறு கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டு வரும் விரிவான தொல்லியல் அகழாய்வுகளின் மூலம் சுடுமண் உருவங்கள், மணிகள், செப்புக் காசுகள், இரும்புப் பொருட்கள், வட்டச்சில்லுகள், ஆட்டக்காய்கள், எலும்பு முனைகள், சுடுமண் காதணிகள், சங்கு வளையல்கள், தந்தத்தினாலான பொருட்கள், தமிழி எழுத்துப்பொறிப்பு கொண்ட பானை ஓடுகள், குறியீடுகள் போன்ற ஏறத்தாழ 14,535 தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. கீழடியில் உள்ள மிகப் பெரிய தொல்லியல் மேட்டில் நடைபெற்ற மற்றும் நடைபெறுகின்ற அகழாய்வுகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ள கட்டுமான அமைப்பானது, இங்கு நகர நாகரிகம் சிறப்புற்று இருந்ததையும், அக்கால பண்பாட்டு வளர்ச்சியினையும் நம் கண் முன்னே காட்டுகிறது.

உலக தரத்தில்...

எனவே, தென்னிந்தியாவில் நிலவிய சங்க கால பண்பாட்டு வரலாற்று ஆய்வில் ஒரு திருப்புமுனைக்கு வித்திட்ட 2,600 ஆண்டுகள் பழமை வாய்ந்த தமிழர் பண்பாடு மற்றும் நகர நாகரிகத்தினை வெளிச்சமிட்டு காட்டியுள்ள கீழடி அகழாய்வுகளின் மூலம் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களைக் கொண்டு, அனைத்து நவீன வசதிகளுடன் கூடிய உலகத்தரம் வாய்ந்த அகழ்வைப்பகத்தினை வருங்கால தலைமுறையினர், மாணவ மாணவியர், அறிஞர்கள், தொல்லியல் வல்லுநர்கள் மற்றும் அயல்நாட்டு வல்லுநர்கள் அறியும் வகையில் அமைப்பது இன்றியமையதாகிறது.

அதன்படி, சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், கொந்தகை உள்வட்டம், கீழடிக்கு அருகே கொந்தகை கிராமத்தில் 0.81.0 எக்டேர் நிலப்பரப்பில் 12 கோடியே 21 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கீழடியில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களை காட்சிப்படுத்திட அமைக்கப்படவுள்ள உலகத்தரம் வாய்ந்த அகழ்வைப்பகத்திற்கு முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி இன்று காணொலிக் காட்சி மூலமாக அடிக்கல் நாட்டினார்.

கீழடியில் உலகத்தரம் வாய்ந்த நவீன வசதிகளுடன் கூடிய அகழ்வைப்பகம் அமைக்கும் பணியானது தமிழ்நாடு அரசின் பொதுப்பணித் துறையின் புராதன கட்டடங்கள் பாதுகாப்புப் பிரிவு மூலமாக மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் க. பாண்டியராஜன், கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர் ஜி. பாஸ்கரன், தலைமைச் செயலாளர் க. சண்முகம்,சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் விக்ரம் கபூர், தொல்லியல் துறை ஆணையர், முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ரூ.10,399 கோடி முதலீடு...

(1–ம் பக்கத் தொடர்ச்சி)

சார்பில், ஜெர்மனி, பின்லாந்து, தைவான், பிரான்ஸ், கொரியா, ஜப்பான், சீனா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, நெதர்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த 17 தொழில் நிறுவனங்களுடன் 15,128 கோடி ரூபாய் முதலீட்டிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டன. இத்திட்டங்களின் மூலம் சுமார் 47,150 நபர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும்.

8 புதிய தொழில்கள்

அதன் தொடர்ச்சியாக, முதலமைச்சர் முன்னிலையில் இன்று 8 புதிய தொழில் திட்டங்களை தமிழ்நாட்டில் துவங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. தற்போது நிலவிவரும் சூழ்நிலையின் காரணமாக, இந்த 8 திட்டங்களில், 5 திட்டங்களுக்கு நேரடியாகவும், 3 திட்டங்களுக்கு காணொலிக் காட்சி மூலமாகவும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

இத்திட்டங்களின் விவரங்கள் பின் வருமாறு:

1. காஞ்சிபுரம் மாவட்டம், ஒரகடத்தில் உள்ள இண்டோஸ்பேஸ் தொழிற் பூங்காவில், விக்ரம் சோலார் நிறுவனம், 5,423 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 7,542 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், சோலார் செல்ஸ் மற்றும் மோடுலஸ் உற்பத்தி செய்யும் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம். இதுவரை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு வந்த சோலார் செல்ஸ் மற்றும் மோடுலஸ், இத்திட்டத்தின் மூலமாக தமிழ்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட உள்ளன.

தொழிற்பூங்கா

2. காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத்தில், 250 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 1,500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், சிஜிடி சாத்ரைய் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின், தொழிற்பூங்கா திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

3. கோயம்புத்தூர் மாவட்டத்தில், 200 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 400 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், அக்குவாசப் நிறுவனத்தின் டக்டைல் அயர்ன் பவுண்டரி திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

4. இராணிப்பேட்டை மாவட்டத்தில், 200 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், என்டிஆர் இன்ப்ராஸ்டெக்சர் நிறுவனம், 125 ஏக்கர் பரப்பளவில் அமைக்க உள்ள தொழிற் பூங்கா திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

5. விழுப்புரம் மாவட்டம், மரக்காணத்தில் 36 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 465 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், ஜிஎல் ஆக்ரோ டெக் நிறுவனத்தின் முந்திரி பதப்படுத்தும் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

6. செங்கல்பட்டு மாவட்டம், சிங்கபெருமாள் கோவில் ஒரகடம் நெடுஞ்சாலையில், 4,000 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 2,500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், ஹிரன்நந்தானி குழுமத்தை சேர்ந்த யோட்டா நிறுவனத்தின் தகவல் தரவு மையம் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

7. கோயம்புத்தூர் மாவட்டத்தில், 250 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 600 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், எல்ஜி எக்யூப்மென்ட்ஸ் நிறுவனத்தின் ஹேர் கம்பரசர்ஸ் உற்பத்தி புரிந்துணர்வு ஒப்பந்தம்.

8. ஈரோடு மாவட்டம், சிப்காட் பெருந்துறை தொழிற்பூங்காவில், 40 கோடி ரூபாய் முதலீட்டில், ஜெஎஸ் ஆட்டோ காஸ்ட் நிறுவனத்தின் பவுண்டரி விரிவாக்கத் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

என மொத்தம், 8 திட்டங்களின் மூலம் 10,399 கோடி ரூபாய் முதலீடுகள் மற்றும் சுமார் 13,507 நபர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும்.

இந்த நிகழ்ச்சியில், தொழில்துறை அமைச்சர் எம்.சி. சம்பத், தலைமைச் செயலாளர் க. சண்முகம், தொழில்துறை முதன்மைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் நீரஜ் மித்தல் மற்றும் செயல் இயக்குநர் மருத்துவர் எஸ். அனீஷ் சேகர், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

மின்கட்டண கணக்கீட்டில் எந்த குளறுபடியும் இல்லை

மக்களை குழப்ப நினைக்கும் ஸ்டாலின் எண்ணம் பலிக்காது

அமைச்சர் பி.தங்கமணி கண்டனம்

சென்னை, ஜூலை 20–

மின்கட்டண கணக்கீட்டில் எந்த குளறுபடியும் இல்லை என்று புள்ளி விவரத்துடன் தி.மு.க. தலைவர் ஸ்டாலினுக்கு அமைச்சர் பி.தங்கமணி பதிலடி கொடுத்துள்ளார்.

100 யூனிட் இலவச மின்சார திட்டத்தில் 4 ஆண்டுகளில் ரூ.11,512 கோடி சலுகை வழங்கப்பட்டுள்ளது. எந்த மாநிலத்திலும் இந்த சலுகை கிடையாது என்றும் அமைச்சர் கூறினார்.

உண்மைக்கு புறம்பாக மக்களை குழப்பி சந்தர்ப்பவாத அரசியல் நடத்த ஸ்டாலின் முயற்சிக்கார். இது மக்களிடம் எடுபடாது என்றும் அமைச்சர் கூறினார்.

மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் பி.தங்கமணி இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

அம்மாவின் அரசு, கொரோனா நோய் தொற்று தொடர்பாக அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் துரிதமாக எடுத்ததன் காரணமாகத்தான் இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில் தான் நோய் தொற்றிலிருந்து குணமடைந்து வீடு திரும்புபவர்களின் சதவீதம் அதிகமாகவும், இறப்பு விகிதம் மிகக்குறைவாகவும் இருந்து வருகிறது.

அம்மாவின் அரசு, தமிழ்நாட்டு மக்களை இத்தொற்றிலிருந்து மீட்கும் பணியில் நேர்மையுடனும், துணிவுடனும், எந்தவித சமரசமும் இன்றி, மக்களின் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

சந்தர்ப்பவாத அரசியல்

மின்சாரம் என்பது மக்களின் அத்தியாவசிய தேவை என தற்போது கூறும் எதிர்க்கட்சித்தலைவர், முந்தைய தி.மு.க. ஆட்சியின் மெத்தனத்தால் நிலவிய கடுமையான மின்வெட்டின் காரணமாக, தமிழ்நாடே இருளில் மூழ்கி இருந்ததை மறந்துவிட்டு சந்தர்ப்பவாத அரசியல் மட்டுமே செய்து வருகிறார். அம்மாவும், அவரைத் தொடர்ந்து அம்மாவின் அரசும், கடந்த 10 ஆண்டுகளாக எடுத்துவரும் பல்வேறு சீரிய நடவடிக்கைகளால் மின் தட்டுப்பாடு என்ற பேச்சுக்கே இடம் இல்லாத வகையில், தமிழ்நாட்டில் தரமான மின்சாரம் தங்குதடையின்றி விநியோகிக்கப்பட்டு வருகிறது. அதுமட்டுமின்றி, தமிழ்நாடு தொடர்ந்து மின்மிகை மாநிலமாகவும் திகழ்ந்து வருகின்றது.

கொரோனா தொற்று பரவாமல் இருக்கத்தான், ஊரடங்கு அமலில் உள்ளது. இந்த ஊரடங்கு நடைமுறை தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல், பிற மாநிலங்களிலும், பல்வேறு நாடுகளிலும் நடைமுறையில் உள்ளது. தொற்று பரவாமல் இருக்க வேண்டும் என்ற காரணத்தால் தான், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக பணியாளர்கள் வீடுதோறும் சென்று மின் கணக்கீடு செய்யவில்லை. அதற்கு பதில், தாழ்வழுத்த மின் பயனீட்டாளர்கள், தங்களுடைய ஜனவரி – பிப்ரவரி மாத கணக்கீட்டு பட்டியலின்படி, மார்ச் – ஏப்ரல் மாதங்களுக்கு மின் கட்டணத்தை செலுத்துமாறு கோரப்பட்டது.

தற்போது, தளர்வுகளுடன் ஊரடங்கு நீட்டிக்கப்பட்டுள்ளதால், மின் கணக்கீடு செய்யும் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த மின் அளவீடு 4 மாதங்களுக்கு உள்ள மின் பயன்பாடு என்பதால், 4 மாத காலத்திற்கான மின் நுகர்வு, இரண்டு மாதங்களுக்கான வீதப்பட்டி அடிப்படையில் சமமாக பிரிக்கப்பட்டுள்ளது.

அந்த மின் நுகர்வு இரண்டு மாதங்களுக்கான வீதப்பட்டிப்படி மின் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கணக்கீடு செய்யும்பொழுது ஒவ்வொரு இரண்டு மாதங்களுக்கான நுகர்விலும், அம்மா 2016–ம் ஆண்டு முதல் கொண்டு வந்த 100 யூனிட்டுகள் இலவச மின்சாரப் பயனை அனைத்து வீட்டு மின் உபயோகிப்பாளருக்கும் வழங்கிய பின்பு கணக்கீடு செய்து, மீதம் செலுத்த வேண்டிய தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

அவ்வாறு கணக்கீடு செய்யப்பட்ட தொகையில், ஏற்கனவே 2020 மார்ச் – ஏப்ரல் மாதங்களில் முந்தைய மாத மின் கணக்கீட்டின்படி செலுத்தப்பட்ட தொகையானது கழிக்கப்பட்டுள்ளது. மேலே கூறியபடி கணக்கீடு செய்ததில் ஏற்கனவே செலுத்தப்பட்ட தொகை அதிகமாக இருப்பின், நுகர்வோரின் எதிர்வரும் கணக்கீட்டில் அந்தத்தொகை சரி செய்யப்படும்.

உயர்நீதிமன்ற தீர்ப்பு

மேற்கண்ட தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் கணக்கீட்டு முறை தவறு என தாக்கல் செய்யப்பட்ட பொது நல வழக்கில், மேற்குறிப்பிட்ட கணக்கீட்டு முறை சரியானது என்பதனை சென்னை உயர்நீதி மன்றம் ஏற்றுக்கொண்டு தீர்ப்பு அளித்துள்ளது. அதுமட்டுமல்லாமல், மேற்கண்ட கணக்கீட்டு முறையினால் தான், ஒவ்வொரு இரண்டு மாதங்களுக்கான கணக்கீட்டிலும், தனித்தனியே 100 யூனிட் இலவச மின்சாரம் நுகர்வோருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்றும் சென்னை உயர்நீதி மன்றம் தெளிவுபடுத்தியுள்ளது. இவ்வாறு கணக்கீடு செய்தது விதிகளுக்கு உட்பட்டதே என்றும், அது தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் நேர்மைத் தன்மையைக் காட்டுகிறது எனவும் உயர்நீதி மன்ற தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த கணக்கீடு குறித்து பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய சந்தேகங்களை தீர்க்கும் வகையில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், ஒவ்வொரு நுகர்வோரும் தனித்தனியே அவர்களுடைய கணக்கீட்டு முறையை வெளிப்படையாகவும், தெளிவாகவும் காணும் வகையில் தனது இணையதளத்தில் வெளியிட்டுள்ளது. கணக்கீட்டில் சந்தேகம் ஏதும் இருக்கும் பட்சத்தில், நுகர்வோர்கள் இணையதளத்தில் சரிபார்த்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

உயர்நீதி மன்றம் தெள்ளத்தெளிவாக தனது தீர்ப்பைக் கூறிய பிறகும், மின்சாரக் கட்டணம் குறித்த கணக்கீட்டு விவரம் இவ்வாறு மிகத் தெளிவாக இணையதளத்தில் வெளியிட்ட பின்னரும், எதிர்க்கட்சித்தலைவர் திரும்பத்திரும்ப மின்சார ரீடிங் எடுத்ததில் பல்வேறு குளறுபடிகள் உள்ளன என மக்கள் கூறுகின்றனர்" எனவும் தவறான அடிப்படையில் கணக்கீடு" எனவும், மின்சார வாரியத்திற்கு லாபம்" எனவும் உண்மைக்கு மாறான செய்தியை கூறிக்கொண்டிருப்பது, மக்களை குழப்ப முயல்வதுதான். ஆனால், அவரது எண்ணம் ஈடேறாது. இது எதிர்க்கட்சித் தலைவர் செய்யும் சந்தர்ப்பவாத அரசியலின் உச்சகட்டம்.

மக்களை திசை திருப்பினார்

எதிர்க்கட்சித் தலைவர், தன்னுடைய தொலைக்காட்சி பேட்டியில், அதிக மின் கட்டணம் சம்பந்தமாக சில ஆவணங்களை காண்பித்தார். அவற்றில் ஒன்றில் மட்டுமே, நுகர்வோரின் விவரம் தெளிவாக தெரிந்ததனால், அதை மின்சார வாரியம் ஆய்வு செய்தது. அந்த ஆய்வில், அந்த நுகர்வோர், வீட்டு மின் நுகர்வோர் இல்லை எனவும், தொழில் மின் நுகர்வோர் எனவும் தெரிய வந்தது. தொழில் மின் நுகர்வோர் அட்டையை காண்பிப்பது, மக்களை திசை திருப்பும் காரியமாகும். இது வன்மையாக கண்டிக்கத்தக்கது.

மின் கணக்கீட்டு வீதப்பட்டி, அதாவது ஸ்லாப்பை மாற்றி மின் கட்டணத்தை ஏற்றி, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் லாபம் பார்க்க வேண்டும் என்று மின் கணக்கீடு செய்வதுமில்லை; அதேபோல லாப நோக்கத்தை கருத்தில் கொண்டு வீட்டு மின் நுகர்வோர்களுக்கு மின்சாரம் விநியோகிப்பதும் இல்லை. எந்த ஒரு அரசும், வீட்டு மின் நுகர்வோர்களுக்கான கணக்கீட்டின் மூலம் லாபம் பார்க்க வேண்டும் என்று செயல்படுவதில்லை. இந்த அடிப்படையில்தான் அம்மா, வீட்டு மின் நுகர்வோர்களுக்கு 100 யூனிட் இலவச மின்சாரம் அளித்தார் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் நினைவில் கொள்ள வேண்டும். தமிழ்நாட்டில், வீட்டு மின் நுகர்வோர்களுக்கான தற்போதைய மின் கட்டணம், அதன் உற்பத்தி செலவை விட மிக, மிக குறைந்த அளவிலேயே உள்ளது. மேலும், அண்டை மாநிலங்களைவிட தமிழ்நாட்டில் மின் கட்டணம் மிகக் குறைவாக உள்ள நிலையில், கட்டணத்தை அதிகப்படுத்தி இருக்கிறார்கள் என்பதும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் லாபம் பார்க்கின்றது என கூறுவதிலும், எள்ளளவும் உண்மை இல்லை. இவ்வாறு அமைச்சர் பி.தங்கமணி கூறியுள்ளார்.

கொரோனா எதிரொலி: ஸ்ரீஹரிகோட்டா விண்வெளி ஆய்வுப் பணிகள் நிறுத்தம்

ஸ்ரீஹரிகோட்டா, ஜூலை 20–

ஸ்ரீஹரிகோட்டா விண்வெளி ஆய்வு மையத்தில் ஆய்வுப் பணிகள் நிறுத்தப்பட்டன.

கொரோனா தொற்று எண்ணிக்கை அதிகரித்ததால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மறு உத்தரவு வரும் வரை ஆய்வுப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நீர், மின்சாரம், தீயணைப்பு சேவைகள் தவிர மற்ற பணிகள் நிறுத்தப்பட்டுள்ளது.

அமைச்சர் பி.தங்கமணி குணமடைந்து வீடு திரும்பினார்

சென்னை, ஜூலை 20–

அமைச்சர் பி.தங்கமணி பூரண குணமடைந்து வீடு திரும்பினார்.

மின்சாரத்துறை அமைச்சர் பி.தங்கமணிக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருந்தது. உடனடியாக அவர் அப்போலோ மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டார். அவருக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில் இன்று அவர் பூரண குணமடைந்து வீடு திரும்பினார்.

---

equitas

எக்விடாஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்
CIN: L65100TN2007PLC064069
பதிவு அலுவலகம்: 410A, 4வது மாடி, ஸ்பென்சர் பிளாசா, ஃபேஸ் 2, எண். 769, மவுண்ட் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 2.
தொ.பே: 044-42995000 | தொலைநகல்: 044-42995050
www.equitas.in | மின் அஞ்சல்: secretarial@equitas.in

உறுப்பினர்களுக்கான அறிவிப்பு

இதன் மூலம் அறிவிக்கப்படுவதாவது

1. எக்விடாஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்–ன், 13 வது வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள செயல்களை நிறைவேற்ற, கம்பெனிகள் விவகாரங்கள் துறை அமைச்சகத்தின் சுற்றறிக்கை எண்கள் 14,17&20/2020 கொண்ட ஏப்ரல் 8, 2020, ஏப்ரல் 13, 2020, மற்றும் மே 5, 2020, தேதியிட்ட சுற்றறிக்கைகள், மே 12, 2020 தேதியிட்ட செபி சுற்றறிக்கை எண் SEBI/HO/CFD/CMD1/CIR/P/2020/79, மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்)விதிகள் 2015–க்கு இணங்கவும் நிறுவனங்கள் சட்டம் 2013 –ன் அனைத்து பொருந்தத்தக்க கூறுகளுக்கு உட்பட்டும் நிறுவனத்தின் 13 வது வருடாந்திர பொதுக் கூட்டம், காணொளி காட்சி /பிற ஒலி ஒளி சாதனங்கள் வாயிலாக, ஆகஸ்ட் மாதம் 10 ஆம் தேதி, 2020 திங்கட்கிழமை அன்று இந்திய நேரப்படி பிற்பகல் 03.00 மணிக்கு நடைபெறும்.
2. 2019 – 20 ஆண்டின் வருடாந்திர அறிக்கையுடன் கூடிய வருடாந்திர பொதுக் கூட்டம் பற்றிய அறிவிப்பின் மின்னணு வடிவ நகல்கள், நிறுவனத்திடம் / டெபாசிட்டரி பங்கேற்பாளர் (கள்) வசம் உள்ள பங்குதாரர்களின் மின்னஞ்சல் முகவரிகளுக்கு மட்டும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
3. 13 வது வருடாந்திர பொதுக் கூட்டம் மற்றும் 2019–20 ஆண்டிற்கான வருடாந்திர அறிக்கை நிறுவனத்தின் https://www.equitas.in இணையதளத்திலும், RTA இணையதளம் https://evoting.kfintech.com பங்குச்சந்தையின் அதாவது பிஎஸ்இ லிமிடெட் – ன் https://www.bseindia.com இணையதளத்திலும், நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ் ஆஃப் இந்தியா லிமிடெட்–ன் https://www.nseindia.com இணையதளத்திலும் இருக்கும்.
4. வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட அலுவல்கள் குறித்து கேபின் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் ("KFINTECH") அளித்த வசதிகள் மூலம், தங்களின் வாக்குகளை தொலை மின்னணு (ரிமோட் இ.வோட்டிங்) மற்றும் பொதுக் கூட்டத்திலும்(AGM) வாக்களிக்கலாம்.
5. அனைத்து உறுப்பினர்களுக்கும் தெரிவிக்கப்படுவதாவது:
   - i உறுப்பினர்கள் 13 வது வருடாந்திர பொதுக் கூட்டத்தில் ஒலி/ ஒளி சாதனங்கள் வாயிலாகவோ அல்லது நேரடி இணைய ஒளிபரப்பு https://emeetings.kfintech.com மூலம் தங்கள் தொலை மின்னணு சான்றுகளை உபயோகித்து பங்கேற்கலாம்.
   - ii ஒலி, ஒளி வடிவில் பங்கேற்பு, மின்னணு வாக்களிக்கும் முறை, காகித வடிவில் பங்கு வைத்திருப்பவர்களும், தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யாத பங்குதாரர்களும் பங்கேற்கும் விவரங்களும் 13 வது வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் உள்ளன.
   - iii ஆகஸ்ட் 3, 2020 தேதியில், உறுப்பினர் பதிவேட்டில் பதிவு பெற்றுள்ள உறுப்பினர்கள் அல்லது டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் பயன்பெறும் உரிமையாளர்கள் மட்டுமே தொலை மின்னணு மூலமாகவோ அல்லது வருடாந்திர பொதுக் கூட்டத்திலோ வாக்களிக்க முடியும். ஆகஸ்ட் 3, 2020 தேதியில் உறுப்பினராக இல்லாதவர்களுக்கு இந்த அறிவிப்பு தகவல் மட்டுமே.
   - iv வருடாந்திர பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்படவுள்ள அலுவல்கள் குறித்த தங்களின் வாக்குகளை தொலை மின்னணு வாக்கு மூலம் பதிவு செய்ய கேபின் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தொலை மின்னணு வாக்கு பதிவு துவங்கும் நேரம் – வெள்ளிக்கிழமை, ஆகஸ்ட் 7, 2020 காலை 9.00 மணி. தொலை மின்னணு வாக்கு பதிவு முடியும் நேரம் – ஞாயிற்றுக்கிழமை, ஆகஸ்ட் 9, 2020 மாலை 5.00 மணி. ஆகஸ்ட் 9, 2020 மாலை 5.00 மணிக்கு தொலை மின்னணு வாக்கு பதிவு கேபின்டெக் நிறுவனத்தால் செயலிழக்கச் செய்யப்படும். தீர்மானத்தின் மீது ஒரு முறை வாக்களித்த உறுப்பினர் அதனை மாற்றிக் கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார் என்பதை கவனத்தில் கொள்ளவும்.
   - v வருடாந்திர பொதுக் கூட்டத்தில் தொலை மின்னணு மூலம் வாக்களித்த உறுப்பினர்கள் ஒலி/ஒளி சாதனங்கள் வாயிலாக பொதுக் கூட்டத்தில் பங்கேற்கலாம். ஆனால் மீண்டும் வாக்களிக்க இயலாது. வாக்களிக்காத உறுப்பினர்கள் மட்டும் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் நேரத்தில் வாக்களிக்கலாம்.
   - vi இந்த அறிவிப்பை பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட பங்குதாரர்களின் பட்டியல் தயாரிக்கும் தேதியான ஜூலை 10, 2020க்கு பிறகு நிறுவனத்தின் பங்குகளை வாங்கி கைவசம் வைத்திருக்கும் பட்சத்தில் அவர்கள், https://evoting.kfintech.com முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பி கேபின் டெக்னாலஜிஸிடமிருந்து தங்கள் யூசர் ஐடி மற்றும் பாஸ்வேர்டைப் பெற்றுக்கொள்ளலாம். இருப்பினும் அப்படிப்பட்ட உறுப்பினர்கள் மின்- வாக்கிற்காக கேபின் டெக்னாலஜிஸ் உடன் பதிவு செய்து கொண்டிருந்தால் அவர்கள், ஏற்கனவே உள்ள தங்கள் யூசர் ஐடி மற்றும் பாஸ்வேர்ட் மூலம் தங்கள் வாக்கை செலுத்தலாம்.
   - vii மின்னணு வாக்களித்தல் பற்றி ஏதேனும் கேள்விகள் / விளக்கங்கள் தேவைப்பட்டால் உறுப்பினர்கள், கேபின் டெக்னாலஜிஸ்–ன் https://evoting.kfintech.com இணையதளத்தில் உள்ள உதவி / கேள்வி பதில் பகுதிக்கும் "டவுன்லோட்ஸ்" பிரிவில் உள்ள மின்னணு வாக்கு உபயோகிப்பாளர் கையேடு பகுதிக்கும் செல்லவும் அல்லது டோல்ஃப்ரீ எண் 1800–3454–001 அழைக்கவும் அல்லது மின்னஞ்சல் einward.ris@kfintech.com அல்லது கீழ்கண்ட முகவரியைத் தொடர்பு கொள்ளவும். திரு ஸ்ரீ சாய் கார்த்திக் நிக்கிசெட்டி, மேலாளர் – கார்ப்பரேட் பதிவேடு கேபின் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட், செலினியம் டவர் B, பிளாட் எண். 31–32, கச்சிபோவ்லி பினான்சியல் டிஸ்ட்ரிக்ட், நானக்ராம்குடா, ஹைதராபாத் – 500 032, தெலுங்கானா.
6. வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் உள்ள தீர்மானங்களின் மீது வாக்களிக்க பங்குதாரர்களின் தகுதியை நிர்ணயிப்பதற்காக, ஆகஸ்ட் 4, 2020 செவ்வாய்க்கிழமை முதல் ஆகஸ்ட் 10, 2020 திங்கட்கிழமை வரை (இரண்டு நாட்களும் சேர்த்து) நிறுவனத்தின் உறுப்பினர் பதிவேடும், பங்கு மாற்ற புத்தகங்களும் மூடப்பட்டிருக்கும் என்பது இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

போர்டின் ஆணைப்படி
எக்விடாஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட் – க்காக
(ஒப்பம்) தீப்தி ஈ. நிறுவன செயலாளர்,

இடம் : சென்னை
தேதி : ஜூலை 18, 2020